[*1994 நவம்பர் 9*

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

திரு. சி. ஞானசேகரன்: ஸ்பீக்கர், சார் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உங்களுடையது ஒன்றும் இல்லை.

திரு. சி. ஞானசேகரன்: பல நாட்களாகக் கேட்கிறேன் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு வேறு பிரச்சினையை எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு.

(அ) செங்கல்பட்டு தாலுகா காரணை கிராமத்தில் அம்பேத்கார் சிலை அகற்றப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட சம்பவம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செங்கல்பட்டு தாலுகா காரணை கிராமத்தில் அம்பேத்கார் சிலை அகற்றப்பட்ட ஒரு சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்ச்சி குறித்து பேரவையில் எழுப்பி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று திரு. போளூர் வரதன் ஒரு அறிவிப்பைக் கொடுத்து இருக்கிறார். அந்தப் பிரச்சினையை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிற விதத்தில் எழுப்ப அனுமதிக்கிறேன். திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் 10ஆம் தேதி செங்கல்பட்டிலே காவல் துறையினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு 2 தாழ்த்தப்பட்டவர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். அதற்குக் காரணம் செங்கல்பட்டு தாலுகா காரணை கிராமத்திலே 1933ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்ற பஞ்சம நில சம்பந்தமான பிரச்சினைகள் பல ஆண்டுகாலமாக அரசின் பல்வேறு கவனங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இறுதியிலே அந்த நிலம் சில அதிகார வர்க்கத்திற்கு உட்பட்டவர்களாலும் பணம் படைத்தவர்களாலும் பறிக்கப்பட்டு, அது நிலுவையில் இருந்ததன் காரணமாக, 1969-ல் அந்த

1994 நவம்பர் 9] [திரு. போளூர் வரதன்]

நிலத்தை பிளாட் கூடப் போட்டு விற்று இருக்கிறார்கள். அதற்குப் பின்னர் 1973-லே, சம்பந்தப்பட்ட நிலம் தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சொந்தம் என்று சொல்லி, அவர்களுக்கு உரிய பட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கிறது. அதற்குப் பின்னாலே மீண்டும் 1986, 1987-லே யு. டி. ஆர்.--ம் வழங்கப்பட்டு, அந்த நிலங்கள் சாகுபடி செய்வதற்கு அரசு கடன் உதவியும் செய்து இருக்கிறது. அதற்குப் பின்னாலே, 1990-லே மீண்டும் அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு, 11 முறை அதற்கான விசாரணைகள் சப்-கலெக்டர் அலுவலகத்திலேயும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அலுவலகத்திலேயும் நடைபெற்று, இன்று நாள் வரையில் அது தீர்க்கப்படாமல் இருக்கிறது. அதன் விளைவாக அந்தப் பகுதியிலே தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். காரணம் என்ன என்று சொல்லுகின்ற போது, அங்கே 650 ஏக்கர் நிலம் இருக்கிறது; அந்த நிலத்தை அந்தப் பகுதியைச் சார்ந்த 7 கிராமங்களுக்கு அரசு கொடுத்து இருக்கிறது; காரணை, நந்தியம்பாக்கம், மணலை போன்ற . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாக அந்தச் சம்பவம் என்ன என்று சொல்லுங்கள். துப்பாக்கிச் சூடுபற்றிக் கவனத்திற்குக் கொண்டு வருவதுதான் பிரச்சினை.

திரு. போளூர் வரதன்: 7 கிராமங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த நிலங்களினுடைய பிரச்சினைகள் அப்படியே இருந்ததன் விளைவாக அங்கு இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் 10 நவம்பர் 1994 அன்று 'கிரீவன்ஸ் டே' என்பதனாலே சப்-கலெக்டரைப் பார்க்க வேண்டும் என்பதற்காக, 7 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அங்கே குழுமி இருக்கிறார்கள். அதிலே காவல் துறையைச் சார்ந்த உயர் அதிகாரி ஒருவர் சம்பந்தப்பட்டு இருப்பதன் காரணமாக, திட்டமிட்டு காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அப்பாவி தாழ்த்தப்பட்ட மக்களை வேண்டுமென்றே சப்-கலெக்டர் அலுவலகத்தின் மீது கல்லை எறிந்தார்கள்; அவரைத் தாக்க முயற்சித்தார்கள் என்ற காரணம் காட்டி, அவர்களை துப்பாக்கியால் சுட்டு இருக்கிறார்கள். துப்பாக்கியால் சுடுகிறார்கள் என்று சொல்கின்றபோது, விதி முறைகள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். அனைவருக்கும் தெரிந்த ஒன்று. முட்டிக் காலுக்கு கீழே சுட வேண்டும் என்று விதி இருந்தும், தலையிலே சுட்டு இருக்கிறார்கள்; நெஞ்சிலே சுட்டு இருக்கிறார்கள்; அப்படிச் சுடுகின்ற இடத்தை நீங்கள் பார்க்க வேண்டும். இருக்கின்ற பெரும்பாலான உறுப்பினர்கள் அந்த வழியாக

சென்று இருப்பார்கள். சப்-கலெக்டர் அலுவலகத்தில் ஒரு விநாயகர் கோயில் இருக்கிறது. அந்த இடத்தில்தான் அவர்கள் ரோடு மறியல் செய்து இருக்கிறார்களே தவிர, தாக்க வேண்டும் என்ற எண்ணத்திலே தாழ்த்தப்பட்டவர்கள் அங்கே சேரவில்லை. அந்த இடத்திலே சுடாமல், அருகாமையில் இருக்கின்ற ஒரு கிலோ மீட்டர் காட்டிற்கு விரட்டிச் சென்று, ** இதிலே அரசினுடைய தவறு என்று நான் எதையும் சொல்லமாட்டேன்.

காவல்துறையைச் சேர்ந்தவர்கள் வேண்டுமென்றே அந்த நிலத்தைப் பறிக்கவேண்டும் என்று ..... (குறுக்கீடுகள்)

Hon. Thiru C. P. Pattabhiraman: I am on a point of order, Sir.

முற்பகல் *11-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொன்ன வாசகத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். அதற்காக பாயின்ட் ஆப் ஆர்டர் வேண்டாம். **

என்று சொன்னது நீக்கப்படுகிறது.

Hon. Thiru C. P. Pattabhiraman: There is an enquiry pending. Rule 66.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனால்தான் முதலிலே நான் உங்களுக்குச் சொன்னேன், இதிலே நீதி விசாரணை போடப்பட்டிருக்கிறது, அதற்கு பாதகம் ஏற்படுகிற வகையில் உள்ளே ரொம்பவும் போகக்கூடாது என்று சொன்னேன். (குறுக்கீடு)

Hon. Thiru C. P. Pattabhiraman: Rule 66—"No motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal or statutory authority performing any judicial or quasi-judicial functions or any commission or court of enquiry appointed to enquire into, or investigate any matter shall ordinarily be permitted to be moved".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி *56*-ன்கீழ் நீங்கள் கொடுத்த போதே நான் அனுமதி மறுத்தது இந்தப் பிரச்சினை. அதன் பின்னர், "இதில் என்னை எழுப்ப மட்டும் அனுமதியுங்கள், இந்தப் பிரச்சினையை அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, மாண்புமிகு

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முதலமைச்சரிடத்திலிருந்து பதில் பெறவேண்டும்” என்று நீங்கள் விரும்பிய காரணத்தாலே, இதை “ஸ்பெசல் மென்சனாக” அனுமதித்தேன். இந்தப் பிரச்சினை ஏற்கனவே நீதி விசாரணையில் இருக்கிற காரணத்தால், விதிமுறைகளின்படி இதை அனுமதிக்க முடியாது. ரொம்ப டீடெயிலாகப் போகாமல், இந்தப் பிரச்சினையை மட்டும் சொன்னால், நீங்கள் பதில் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொன்னேன். நீங்கள் முழுமையாக உள்ளே போவது சரியல்ல. அந்தப் பிரச்சினையை மட்டும் சொல்லி முடியுங்கள்.

திரு. போளூர் வரதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி, நீதி விசாரணையை முதல் அமைச்சர் அவர்கள் அமைத்திருக்கிறார்கள். நான் வரவேற்கிறேன். தமிழகத்திலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பிலே முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதே நேரத்திலே நீதி விசாரணைக் கமிஷன் அமைத்ததற்குப் பின்னாலே பிரச்சினைக்குள்ள அந்த இடத்திலே காம்பவுண்ட் சுவர் கட்டிக்கொண்டு இருக்கிறார்களே, அது இந்த நீதி விசாரணையை மீறாதா? அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லவேண்டும். நான் சொல்வதற்கு . . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீதி விசாரணைக்கு உட்பட்ட ஒரு பொருளை இங்கே எழுப்ப முடியாது என்கிற விதியைத்தான் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

திரு. போளூர் வரதன்: விசாரணைக் கமிஷன் அமைத்த பின்னாலே காம்பவுன்ட் சுவர் கட்டிக் கொண்டு இருக்கிறார்களே, இது எந்தச் சட்டத்தில் வருகிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே எழுப்ப முடியாது என்று சொன்னார். (குறுக்கீடு)

திரு. போளூர் வரதன் : ஆகவே, அதன் உள்ளே சொல்லிக் கொண்டு போனால், பிரச்சினைகள் வரும் என்பது எனக்கும் தெரியும். நான் வேறு ஒன்றையும் சொல்கிறேன். இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற சில அரசியல் கட்சிகள் வேக வேகமாக ஓடி, செங்கற்பட்டிலே ஒரு ஊர்வலத்தை நடத்தி, நாங்கள்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாவலர்கள் என்று சொல்கிறார்களே, அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் தான் இன்றைக்கு இந்தப் பிரச்சினையை உருவாக்கிக்

கொண்டிருக்கிறார்கள் என்பதை என்னால் சுட்டிக்காட்ட முடியும். ஆதாரத்தோடு நிருபிக்க முடியும். ஆனால், தமிழக சர்க்காரும், தமிழக முதலமைச்சர் அவர்களும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு விரோதமானவர்கள் என்பது போன்ற ஒரு காட்சியை உருவாக்கவேண்டும் என்பதற்காக வேண்டுமானால், இலாபம் தேடி வேண்டுமானால் ஓடலாமே தவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமோசனம் கொடுக்கின்ற நிலை இன்றைய முதலமைச்சரிடத்திலே இருக்கிறது என்பதை தாழ்த்தப்பட்ட மக்கள் நம்புகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், கடந்த மாதம் மிகப் பெரிய தலைவர், நம்முடைய தேவர் பெருமகனாருடைய பிறந்தநாள் விழாவிற்குச் செல்கிறார்கள். எல்லாத் தலைவர்களும் செல்கிறார்கள். நான் வரவேற்கிறேன். ஒரு மறைந்த தலைவரை, மரியாதைக்குரிய தலைவரை வணங்குவதற்காகச் செல்லுவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், அதே நேரத்திலே அங்கே தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இடையில் ஒரு இனக் கலவரத்தை உருவாக்கி, ஆதாயம் தேடுகின்ற சூழ்நிலையில்.....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேண்டாம். (குறுக்கீடு) சம்பந்தம் இல்லாத பிரச்சினை. இதிலே வேண்டாம். (குறுக்கீடு) செங்கற்பட்டு பிரச்சினையோடு இருங்கள்.

திரு. போளூர் வரதன் : தாழ்த்தப்பட்டவர்கள் பிரச்சினை என்பதால் சொல்கிறேன். தமிழக முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்ற அவாவோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள், 21-ஆம் நூற்றாண்டுக்கு இந்திய நாட்டை அழைத்துச் செல்வார் என்று உலகமே எதிர்பார்த்தது. ஆனால், அவர் இன்றைக்கு இல்லை என்றாலும், தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றி, தமிழகத்தை 21-ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்கின்ற ஒரு தலைவி இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கிறது. ஆகவேதான் கேட்கிறேன். அங்கே இருக்கின்ற காவல்துறை அதிகாரிகள் வேண்டுமென்றே, திட்டமிட்டு, தாழ்த்தப்பட்டவர்களை அடக்கி ஒடுக்கி, குருவிகளைப் போன்று சுட்டுத் தள்ளி இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, உரிய விசாரணை நடத்தி, அந்த நிலம் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் போய்ச் சேருவதற்காகவும், அந்த நிலம் சம்பந்தப்பட்டவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள்

1994 நவம்பர் 9] [திரு. போளூர் வரதன்]

மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காகவும் நான் இதைச் சொல்கிறேன். அந்த சப்-கலெக்டரே விசாரணையில் சொல்லியிருக்கிறார்கள். உங்களுக்கு அந்த நிலம் சொந்தம் என்று சொல்லிவிட்டு, அவரே, சுடுவதற்கும் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த சப்-கலெக்டரும் அங்கே இருக்கிறார். அந்த டி.எஸ்.பி.யும் அங்கே இருக்கிறார். சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரி யார் என்பதை உலகம் அறிவதற்கு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், காரணை கிராமத்தில் கௌதம் சந்த் மற்றும் அவரது குடும்பத்தாருக்குச் சொந்தமான நிலத்தில், 5 அக்டோபர் 1994 அன்று 150 பேர்கள் தீபன் சக்கரவர்த்தி என்பவரின் தலைமையில் அத்துமீறி பிரவேசம் செய்ததாகத் தெரிகிறது. மேலும் அவர்கள், அங்கு இருந்த பூந்தொட்டிகள், சுற்றுச் சுவர்கள் ஆகியவற்றைச் சேதப்படுத்தியதாகவும், பின்னர் அந்த நிலத்திற்குக் போகும் பிரதான வழியில், டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்களுடைய சிலை ஒன்றை அமைத்ததாகவும் தெரிகிறது.

முற்பகல் 11-05

திரு. கௌதம் சந்த் அவர்கள் கொடுத்த புகாரின் பெயரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, தீபன் சக்கரவர்த்தி மற்றும் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். காவல் துறையினர், டாக்டர் அம்பேத்கார் அவர்களின் சிலையையும் கைப்பற்றியுள்ளனர்.

காவல் துறையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், டாக்டர் அம்பேத்கார் அவர்களின் சிலையை அகற்றியதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், பஞ்சம நில உரிமையாளர் பாதுகாப்புப் பிரிவின் உறுப்பினர்களான பாதிரியார் திரு. ஏசு மரியான், வழக்கறிஞர் திரு. குமார், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர், திரு. முருகேசன் ஆகியோர், துணை ஆட்சியர் அலுவலகத்திற்குச் சென்று இந்தப் பிரச்சினையைக் கிளப்புவது எனத் தீர்மானித்ததாகத் தெரிகிறது.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 நவம்பர் 9

1994 அக்டோபர் 10-ந்தேதி அன்று, 400--க்கும் மேற்பட்ட கும்பல் ஒன்று துணை ஆட்சியர் அலுவலகத்திற்கு முன்பு கூடியதாகவும், 50 பேர் அதில், வலுக்கட்டாயமாக, துணை ஆட்சியரின் அறைக்குள் நுழைந்து, கௌதம் சந்திற்கு சொந்தமான நிலத்தை, தீபன் சக்கரவர்த்தி என்பவரின் பெயரில் மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று மிரட்டியதாகவும் தெரிகிறது.

துணை ஆட்சியர், அவர்களின் நடவடிக்கைகளைக் கண்டித்தபோது அந்தக் கும்பல் வன்முறையில் இறங்கி, துணை ஆட்சியரின் அறையில் இருந்த ஜன்னல் கண்ணாடிகள், கதவுகள், ஆகியவற்றைச் சேதப்படுத்தியதோடு, வெளியில் நின்றிருந்த ஜீப்பையும் தாக்கி இருக்கிறார்கள்.

இதனைத் தொடர்ந்து கல்வீச்சு நடைபெற்றதாகத் தெரிகிறது. நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே, துணை ஆட்சியர், காவல் துறைக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

செங்கற்பட்டு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அந்த இடத்திற்கு விரைந்து வந்துள்ளார். காவல் துறையினரைக் கண்டதும், அந்தக் கும்பல் நெடுஞ்சாலையின் குறுக்கே அமர்ந்து கொண்டு வாகனங்களின் போக்குவரத்திற்கு இடையூறு செய்துள்ளனர்.

மேலும், அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்தில் இருந்த பயணிகளை இறக்கிவிட்டு, அதற்குத் தீயிட்டு, சேதம் விளைவித்துள்ளார்கள். சாலை ஓரத்தில் இருந்த சிமெண்ட் குழாய்களும் உடைக்கப்பட்டுள்ளன.

துணை ஆட்சியர் சட்ட விரோதமான செயல்களில் ஈடுபட்ட கும்பல் கலைந்து செல்லவேண்டும் என எச்சரிக்கை விடுத்தும், பயன் இல்லாது போன காரணத்தினால், காவல் துறையினர், தடியடிப் பிரயோகம் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாகத் தெரிகிறது.

பொதுச்சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படாமல் பாதுகாக்கவும், பொது அமைதிக்கு மேலும் குந்தகம் ஏற்படாமல் தடுக்கவும், துணை ஆட்சியரின் ஆணையின் பேரில் காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார்கள்.

1994 நவம்பர் 9] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

இந்தத் துப்பாக்கிச் சூட்டில், ஜான் தாமஸ், ஏழுமலை, சங்கர் மற்றும் சேகர், ஆகிய 4 நபர்கள் காயம் அடைந்துள்ளனர். மேலும் இந்தச் சம்பவத்தில், செங்கற்பட்டு காவல் துறை கண்காணிப்பாளர் உள்பட, காவல் துறையைச் சேர்ந்த 7 பேர் கல் வீச்சினால் காயம் அடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் செங்கற்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயம் அடைந்த ஜான் தாமஸ், 1994 அக்டோபர் 11 அன்றும் ஏழுமலை 1994 அக்டோபர் 15 அன்றும், மரணம் அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக காவல் துறையினர் வழக்கு ஒன்றைப் பதிவு செய்து, 20 பெண்கள் உள்பட 61 நபர்களைக் கைது செய்துள்ளார்கள். அவர்கள் அனைவரும், நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர். பின்னர் குற்றஞ்சாட்டப்பட்ட 61 நபர்களில், 58 பேர் நிபந்தனையுடன் கூடிய ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

விரும்பத்தகாத இந்தச் சம்பவம், எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன் அதே நாளில், அதாவது 1994 அக்டோபர் 10 அன்றே நீதி விசாரணை ஒன்றை நடத்துவதற்கு, நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தலைமைச் செயலாளருக்கு ஆணையிட்டேன்.

தலைமைச் செயலாளரும் அன்றே உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு நீதி விசாரணை நடத்துவதற்காக, நீதிபதி ஒருவரின் பெயரைப் பரிந்துரைக்குமாறு கடிதம் எழுதியுள்ளார். தலைமை நீதிபதியின் பரிந்துரையின்படி ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி, திரு. பெல்லி அவர்கள், நீதி விசாரணை நடத்துவதற்காக ஆணையிடப்பட்டது. இந்த நீதி விசாரணை தனது பணியைத் தொடங்கி உள்ளது.

மேலும், இந்த விரும்பத்தகாத சம்பவத்தில் மரணம் அடைந்த 2 ஆதிதிராவிடர் குடும்பங்களின் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு, அந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 50,000 ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்தேன் என்பதையும் அதன்படி அந்த நிவாரணத் தொகை வழங்கப்பட்டு விட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [*1994* நவம்பர் *9* முற்பகல் *11–10*

தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க எங்கள் அரசு ஒருபோதும் தயங்காது. (மேசையைத் தட்டும் ஒலி) நீதி விசாரணை நடைபெற்று வருவதால் இந்த வழக்கு குறித்து, இதற்கு மேலும் இந்தச் சபையில் விவாதிப்பது முறையல்ல என்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டு, நீதி விசாரணை முடிவு கிடைத்தவுடன், அதன் மீது இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். பலமுறை இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு துப்பாக்கிச் சூடு நடைபெற்றாலோ அல்லது வேறு சட்ட ஒழுங்குப் பிரச்சினை நடைபெற்றாலோ அதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அரசின் பதிலைப் பெற வேண்டும் என்ற காரணத்தைச் சொல்லி, இந்த அவையில் உங்கள் அனுமதியோடு இந்தப் பிரச்சினையை எழுப்புகிறார்கள். பின்னர் அந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும் குறிப்பிடாமல் அவர்கள் தங்கள் விருப்பம் போல் அந்தப் பிரச்சினையைத் திரித்து, பத்திரிகைகளில் வரவேண்டும் என்பதற்காகவே, நடைபெறாத சம்பவங்களையெல்லாம் நடைபெற்றதாக அவர்கள் இங்கே மிகவும் விவரமாக, உண்மைக்குப் புறம்பான விவரங்களை இந்த அவையில் அளிக்கிறார்கள். இதை உண்மையிலேயே நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். காம்பவுண்ட் சுவர் அங்கே எழுப்பப்பட்டுக் கொண்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். அதைப் பற்றிய எந்தத் தகவலும் எனக்கு இல்லை. நான் ஏற்கெனவே சொன்னது போல நீதி விசாரணை அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு காவல் துறை அதிகாரிதான் அதற்குப் பின்னணியில் இருக்கிறார் என்றும் மாண்புமிகு உறுப்பினர் குற்றம் சாட்டியிருக்கிறார். யாரையும் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்குக் கிடையாது. எனவேதான் இந்தச் சம்பவத்தைப் பற்றி கேள்விப்பட்ட உடனேயே, நீதி விசாரணைக்கு நானே ஆணையிட்டேன். ஆகவே நீதி விசாரணை முடிந்து அறிக்கை கிடைக்கும்போது அந்த நீதிபதி என்னென்ன பரிந்துரைகள் செய்கிறாரோ, அந்தக் கமிஷன் என்னென்ன பரிந்துரைக்கிறதோ அதைத் தவறாமல் ஏற்றுக்கொண்டு, இந்த அரசு நீதி வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.